## DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII, Cr.P.C.)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC – 293/2023 |
| Deposition of Witness | : | PW– 3 |
| Name | : | யமுனாதேவி |
| Husband Name | : | கணேசன் |
| Village | : | ஊதியூர் |
| Taluk | : | காங்கயம் |
| Age | : | 53 |

Accused absent. 317 petition filed and allowed.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 09.03.2026

**முதல் விசாரணை**

1. நான் தற்போது ஊதியூர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கினை புலன் விசாரணை மேற்கொண்ட காவல் ஆய்வாளர் காமராஜ் அவர்கள் மத்திய நுண்ணறிவு பிரிவிற்கு பணிமாறுதல் காரணமாக வேறு மாவட்டத்திற்கு சென்றுவிட்டதால் தற்போது ஆவணங்கள் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன்.

2. கடந்த 16.07.2023 ஆம் தேதியன்று மாலை 18.30 மணிக்கு ஊதியூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் திரு.தேவராஜ் என்பவரிடம் இவ்வழக்கின் வாதி இம்முடி குமார காங்கய மன்றாடியார் என்பவர் ஆஜராகி கொடுத்த எழுத்து பூர்வமான புகாரினை பெற்று அதன் தன்மைக்கேற்ப ஊதியூர் காவல் நிலையக் குற்ற எண். 86/2023 – U/S: 279, 304(A) IPC ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து அதன் அசலை நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளார். **(முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

3. பின்னர் இவ்வழக்கு கோப்பினை தொடர்ந்து புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு கடந்த 17.07.2023 ஆம் தேதியன்று காலை 06.30 மணிக்கு சம்பவ

இடத்தை ஆஜர் சாட்சிகள் ஆசைத்தம்பி மற்றும் ரவிக்குமார் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து வாக்குமூலங்கள் பதிவு செய்துள்ளார். **(மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

4. பின்னர் கடந்த 17.07.2023 ஆம் தேதி காங்கயம் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் பெயரில் அமராவதி காங்கயம் மன்றாடியார் என்பவரின் இறப்பு இண்டிமேசன் பெற்று 17.07.023 ஆம் தேதி காங்கயம் அரசு மருத்துவமனை சவக்கிடங்கிற்கு சென்று வழக்கில் இறந்துபோன அமராவதி காங்கயம் மன்றாடியார் என்பவரது பிரேதத்தை பார்வையிட்டு ஆஜர் பஞ்சாயத்துகாரர்களுக்கும் சாட்சிகளுக்கும் முறைப்படி சம்மன் சார்வு செய்து சவக்கிடங்கிற்கு முன்பாக வைத்து காலை 08.30 மணியில் இருந்து காலை 10.30 மணி வரை பிரேத விசாரணை மேற்கொண்டுள்ளார். பின்னர் சாட்சிகள் கிருஷ்ணசாமி, கலையரசன், செல்வராஜ், விஷ்ணுவரதன், வினோத்குமார், சத்தியசீலன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்துள்ளார். இறந்துபோன அமராவதி காங்கயம் மன்றாடியார் என்பவரின் பிரேதத்தின் மீது பிரேத பரிசோதனைக்காக முதல் நிலைக்காவலர் 1811 குமார் என்பவர் மூலமாக காலை 10.45 மணிக்கு காங்கயம் அரசு மருத்துவமனை மருத்துவர் அவர்களிடம் தக்க வேண்டுகோள் கடிதத்துடன் ஆஜர்படுத்தியும் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தியுள்ளார். **(இறந்துபோன அமராவதி காங்கயம் மன்றாடியார் என்பவரின் பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

5. பின்னர் கடந்த 18.07.2023 ஆம் தேதி இரவு 20.00 மணிக்கு நிலையம் ஆஜரான எதிரி அந்தோணி ஜீன் என்பவரை கைது செய்து தக்க நிலைய பிணையில் விடுவித்தார்.

6. இவ்வழக்கில் கடந்த 18.07.2023 ஆம் தேதியன்று விபத்தை ஏற்படுத்திய TN 81 AZ 4467 என்ற பதிவு எண் கொண்ட Ertiga Car வாகனத்தின் விபத்திற்கான காரணம் அறியும்பொருட்டு காங்கயம் மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களிடம் ஆய்வுக்கு உட்படுத்தியுள்ளார். இவ்வழக்கில் இறந்துபோனவர் ஓட்டி வந்த TN 33 AU

2370 என்ற TVS xl Super என்ற வாகனத்தை கடந்த 27.07.2023 ஆம் தேதியன்று ஆய்வுக்கு உட்படுத்தி சான்று வழங்க விபத்திற்கான காரணம் அறியும்பொருட்டு காங்கயம் மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களிடம் ஆய்வுக்கு உட்படுத்தி, சான்று வழங்கிய மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.ஈஸ்வரன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **( TN 81 AZ 4467 என்ற பதிவு எண் கொண்ட Ertiga Car வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.5 ஆகவும், TN 33 AU 2370 என்ற பதிவு எண் கொண்ட TVS xl Super இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

7. பின்னர் இவ்வழக்கு விபத்தில் காயம்பட்டு இறந்துபோன அமராவதி காங்கயம் மன்றாடியார் என்பவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்த ராயல்கேர் மருத்துவமனை மருத்துவர் நித்யா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேடு நகல்கள் பெற்றுள்ளார். மேலும் வழக்கு விபத்தில் இறந்துபோன அமராவதி காங்கயம் மன்றாடியார் என்பவரின் இறப்பை உறுதி செய்து இறப்பு இண்டிமேசன் வழங்கி, பிரேதத்தின் மீது பிரேத பரிசோதனை மேற்கொண்ட காங்கயம் அரசு மருத்துவமனை மருத்துவர் தியாகராஜன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பிரேத பரிசோதனை சான்று பெற்றேன். **(அமராவதி காங்கயம் மன்றாடியார் என்பவரின் விபத்து பதிவேடு(ராயல்கேர் மருத்துவமனை) அ.சா.ஆ.7 ஆகவும், காங்கயம் அரசு மருத்துவமனை பிரேத பரிசோதனை சான்று அ.சா.ஆ.8 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது).**

8. பின்னர் இவ்வழக்கில் பிரேத விசாரணை வழிக்காவல் செய்த முதல்நிலைக் காவலர் 1811 திரு. குமார் என்பவரையும் முதல் விசாரணை மேற்கொண்ட திரு, தேவராஜ் என்பவரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் வழக்கின் புலன் விசாரணை முடித்து 11.10.2023 ஆம தேதி எதிரி மீது 279 , 304(A) IPC ன் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

விபத்து சம்பந்தமாக கண்ணுற்ற சாட்சிகள் யாரும் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். விபத்தில் அடிபட்ட நபருக்கு முறையான ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரிதான். அவர் ஓட்டிச் சென்ற இருசக்கர வாகனத்திற்கு தகுதிச்சான்று மற்றும் காப்பீடு இல்லை என்றால் சரிதான். விபத்து சமயத்தில் எதிரிக்கு முறையான ஓட்டுநர் உரிமம் மற்றும் அவர் ஓட்டிச்சென்ற வாகனத்திற்கு காப்பீடு உள்ளது என்றால் சரிதான். விபத்தில் இறந்த நபர்தான் சாலையில் வாகனம் வருவதை கவனிக்காமல் திடீரென சாலையை கடக்க முயற்சி செய்து வலிய விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. விபத்து நஷ்ட ஈடு பெறவேண்டி அ.சா.1 கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரியின் மீது குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பெறவில்லை என்றால் சரியல்ல. விபத்திற்கும் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI
Digitally signed by D THENMOZHI
Date: 2026.03.09 17:55:59 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்